# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலத்தின் 23-ஆம் ஞாயிறு | 6 செப்டம்பர் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: குடும்பம்: தேடிச்சென்று உதவுதல்

# மமேமா (MPC) 2026

## மலேசிய குடும்பம் - சமூகத்தில் தேடிச் சென்று உதவுதல்

கிறிஸ்தவர்களாகிய நாம் சமூகத்தின் ஒரு அங்கம். நாம் நமது நம்பிக்கையை மலேசிய யதார்த்தத்திற்கு வெளியே வாழ்வதில்லை, மாறாக அதற்குள்ளேயே வாழ்கிறோம். நமது யதார்த்தம் செழுமையானது, சிக்கலானது, சில சமயங்களில் வேதனையானது. நாம் பல கலாச்சாரங்கள், மொழிகள், மதங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளுக்கு மத்தியில் வாழ்கிறோம். சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவில் நாம் வெவ்வேறு வரலாறுகளைச் சுமக்கிறோம். சிலர் நகரங்களிலும், மற்றவர்கள் கிராமப்புறம் அல்லது தொலைதூர சமூகங்களிலும் வாழ்கின்றனர். சிலர் வறுமை, இடம்பெயர்வு, தனிமை, இடமாற்றம், குடும்ப அழுத்தம் அல்லது கவனிக்கப்படாத உணர்வு போன்றவற்றுடன் போராடுகிறார்கள்.



Celebrate Listen Walk (cf. Is 2:2-5)

MPC2026

இதனால்தான் மலேசியர்களாகிய நம்மால் சமூகத்தைப் பற்றி தூரத்திலிருந்து பேச முடியாது, ஏனெனில் நாமும் அதன் ஒரு அங்கம். நமது அண்டை வீட்டார் வெறும் பேசப்படும் கருத்துகள் அல்ல, மாறாக நமது வீடுகள், பள்ளிகள், பணியிடங்கள், சந்தைகள், கிராமங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், பண்ணைகள், மருத்துவமனைகள் மற்றும் தெருக்களில் நாம் சந்திக்கும் மனிதர்கள்.

இந்தச் சமூகத்தில் ஒரு மலேசியக் கத்தோலிக்கராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை MPC2026 ஆழமாக ஆராயும். வேற்றுமையில் ஒற்றுமை என்பது வெறும் முழக்கம் அல்ல, அது நமது கிறிஸ்தவப் பொறுப்பு. அது நம்மை மற்றவர்களுடன் கைகோர்க்கவும், பார்க்கவும், செவிமடுக்கவும், மதிக்கவும், பாலங்களைக் கட்டவும் தூண்டுகிறது.

சமூகத்தில் நமது இடத்தைப் பற்றி இன்னும் தெளிவாகச் சிந்திக்க Fratelli Tutti ஃபிராடெல்லி டுட்டி(அனைத்து சகோதர சகோதரிகளே!) என்னும் சுற்றுமடல் நமக்கு உதவுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் நமது சொந்தக் குழு, இனம், மதம், மொழி அல்லது சமூகத்திற்கு அப்பாற்பட்டு நமது பார்வையை விரிவுபடுத்துகிறார். அவர் இவ்வாறு கூறுகிறார் “நமது இந்தக் காலத்தில், ஒவ்வொரு மனிதனின் கண்ணியத்தையும் ஏற்றுக்கொள்வதன் மூலம், சகோதரத்துவத்திற்கான ஒரு உலகளாவிய பேராவலின் மறுபிறப்பிற்கு நாம் பங்களிக்க முடியும் என்பதே எனது விருப்பம். இதுவே அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சகோதரத்துவம்” (FT 8).

இது மலேசியாவிற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. நாம் பன்முகத்தன்மையுடன் வாழ்ந்து பழகிவிட்டோம், ஆனால் ஒருவருக்கொருவர் அருகில் வாழ்வது என்பது ஒருவருக்காக ஒருவர் வாழ்வதற்குச் சமமாக இருப்பதில்லை. ஒரு சமூகம் பன்முகத்தன்மை கொண்டதாக இருந்தாலும், பிளவுபட்டே இருக்க முடியும். நாம் ஒரே சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் பொது இடங்களைப் பகிர்ந்து கொண்டாலும், மற்றவர்கள் சுமக்கும் சுமைகளைக் காணத் தவறிவிடுகிறோம்.

Fratelli Tutti ஃபிராடெல்லி டுட்டி, அண்டை அயலார் என்பதன் பொருளை மீட்டெடுக்க நம்மை அழைக்கிறது. திருத்தந்தை பிரான்சிஸ், நல்ல சமாரியனின் உவமையைப் பற்றி சிந்தித்து, 'என் அயலான் யார் என்பது மட்டுமல்ல, தேவையிலுள்ள ஒருவருக்கு நான் அயலானாக மாறுவேனா என்பதே கேள்வி' என்று நமக்கு நினைவூட்டுகிறார். இது மலேசியத் திருஅவைக்கு முக்கியமானது. நமது சமூகச் சாட்சியம், உண்மையான சூழ்நிலைகளில் உள்ள உண்மையான மக்களிடமிருந்து தொடங்க வேண்டும்.

இதில் ஏழைகள், புலம்பெயர்ந்தோர், அகதிகள், நாடற்றவர்கள், முதியவர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், கிராமப்புற சமூகங்கள், நெருக்கடியில் உள்ள குடும்பங்கள் மற்றும் மறக்கப்பட்டதாக உணர்பவர்கள் ஆகியோர் அடங்குவர். மேலும், பிற மதங்களையும் கலாச்சாரங்களையும் சேர்ந்த மக்களும் இதில் அடங்குவர்; அவர்களுடன் நம்பிக்கை, அமைதி மற்றும் பொதுநலனைக் கட்டியெழுப்ப நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

மலேசியாவில் உள்ள திருஅவை இதை இன்னும் அதிக நம்பிக்கையுடன் எவ்வாறு வாழ முடியும் என்று கேட்க MPC2026 நமக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. நாம் சமூகத்திலிருந்து விலகிக்கொள்ள அழைக்கப்படவில்லை. இரக்கம், பணிவு, துணிவு மற்றும் நம்பிக்கையுடன் பிறரை அணுகவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

"நாம் மலேசியர்கள்" என்று சொல்வது, ஒரு சமூகத்தில் தங்களுக்குரிய இடத்தைக் கோருவது மட்டுமல்ல. நாம் அன்புசெய்யும் இந்த மண்ணில், சமூகத்தில் நமது இடத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகும்.

**இன்றைய இறைவார்த்தை:**
எசேக்கியேல் 33: 7-9
திருப்பாடல் 95: 1-2, 6-9
உரோமையர் 13: 8-10
மத்தேயு 18: 15-20

"குடும்பம் என்பது சமூகத்தின் முதல் மற்றும் இன்றியமையாத அணுவாகும்."
- புனித 2 ஆம் ஜோன் போல் (Familiaris Consortio, 42)

INTERNAL CIRCULATION ONLY
BUL 36/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org